3. அறிவிப்பு

கவன ஈர்ப்பு ஒத்திவைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-இன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு, உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மதிப்பீட்டுக் குழு, தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கல்லூரிக் கல்வி குறித்த குழுவின் ஆறாவது அறிக்கையினையும், குடிநீர் வழங்கல் குறித்த குழுவின் ஏழாவது அறிக்கையினையும், குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2001-2002ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 68 முதல் 75 வரையிலான 8 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS